செய்தி வெளியீடு எண்: 864 நாள்: 05.10.2010

## 5.10.2010 அன்று நடைபெற்ற இராமச்சந்திரா பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை

இராமச்சந்திரா பல்கலைக்கழகத்தினுடைய வெள்ளிவிழா நிகழ்ச்சியிலே கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மகிழ்ச்சியினூடே இந்த விழா மேலும் சிறப்புற; மேலும் நாமெல்லாம் மகிழ்ச்சி அடையக்கூடிய வேளையில்; இன்று படமாகத் திறந்து வைக்கப்பட்ட அன்புக்குரிய பெரியவர் உடையார் அவர்கள் இல்லையே என்ற அந்த ஒரு கவலையைத் தவிர, வேறு எதுவுமில்லை.

இந்தப் பல்கலைக்கழகம் – இன்று பல்கலைக்கழகம் என்று அழைக்கப்படுகின்ற இந்த மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை வளாகம் – சில ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் வசம் வந்து, அதற்குப் பிறகு ''எடுத்தவனே கொடுத்து விட்டாண்டி'' என்ற பாடலைப் போல எங்களிடமிருந்து இதை வழக்கு வாயிலாக, நீதிமன்றத் தீர்ப்பின் வாயிலாக உடையார் அவர்களும், அவரோடிருந்த கெழுதகை நண்பர்களும் பெற்று, இன்று பெரும் பல்கலைக்கழகமாக ஆக்கியிருக்கிறார்கள் என்றால், இதை அவர்கள் எடுத்தபோது எனக்கு ஒரளவுக்கு கவலை இருந்தாலும்கூட, இன்று இதனை வெள்ளி விழா கொண்டாடுகின்ற அளவுக்கு, உலகத்திலே உள்ள மருத்துவத்துறை நண்பர்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவுக்கு, தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்ற அளவுக்குப் பல்வேறு மதிப்புரைகளைப் பெற்று விளங்குகின்ற வகையில் சிறப்பெய்து உள்ள பல்கலைக்கழகங்களில் ஒன்றாகத் திகழ்கிறது என்பதைக் காணும்போது நான் அன்று கொண்ட கவலையை மறக்கிறேன்; இன்று கொண்டுள்ள என் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை என்பதை உங்களிடத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எந்த ஒரு நிறுவனமானாலும் அல்லது இது போன்ற பல்கலைக்கழகங்கள் ஆனாலும், அரசின் கையிலே இருந்தால் அது பொதுத்துறை தத்துவத்தின் வாயிலாக சிறப்புக்குரியதுதான் என்றாலும்கூட; பொதுத்துறைக்கு ஈடாக, தனியார் தங்களுடைய ஸ்தாபனத்தை வளர்க்கிறார்கள் – அந்த உணர்வோடு உழைக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது இதையும் நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதையும் என்று சொல்லும்போது, ஏதோ ஒரு படி குறைவாகச் சொல்வதாக யாரும் கருதக்கூடாது. தனியார் துறையிலே இருக்க வேண்டும் என்று நீதிமன்றம் வரையிலே சென்று வெற்றி பெற்றவர்கள் – தனியார் துறையையும் எங்களால் வெற்றிகரமாக நடத்திக் காட்ட முடியும் – பொதுத்துறை பலவற்றை இன்றைக்கு இயக்குகின்ற ஒரு முதலமைச்சரே வந்து பாராட்டுகின்ற அளவுக்கு வெள்ளி விழா நடத்துகின்ற வகையிலே (கைதட்டல்) எங்கள்

ஸ்தாபனத்தை நாங்கள் உருவாக்க முடியும் என்று ஒரு அறைகூவலாக இன்றைக்கு நிரூபித்திருக்கிறார்கள். மறைந்து போயிருந்தாலும், நம்மிடையே இல்லாவிட்டாலும், நம் நெஞ்சங்களில் நினைவாக இருக்கின்ற உடையார் அவர்களுக்கும், அவருடைய அருமை மகன் தம்பி வெங்கடாசலம் அவர்களுக்கும், அவர்களோடு ஒத்துழைக்கின்ற மருத்துவத்துறை நண்பர்கள், தொழிலாளர்கள், அலுவலாளர்கள் அனைவருக்கும் நான் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பல விதத்தில் எனக்கும், இந்த மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கும் – இது கல்லூரியாக இருந்த அந்தக் காலத்திலே இருந்து தொடர்பு உண்டு என்றாலும்கூட; இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நானே இந்தப் பல்கலைக்கழகத்திலே உள்ள மருத்துவமனை அறையில் நோயாளியாக சிசிக்சை பெற்றவனாக, ஏறத்தாழ இரண்டு மாத காலம் இங்கேயே தங்கி, இங்குள்ள மருத்துவத்துறை நண்பர்களோடும், மற்ற அலுவலாளர்களோடும் பழகுகின்ற அந்த வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன். நான் இந்த மருத்துவமனையிலே எந்த டாக்டர்களை மறந்தாலும்கூட, யாரை நினைக்காமல் இருந்தாலும்கூட, இங்கே நாங்கள் மாலை நேரத்திலே அமர்ந்து காற்று வாங்குகின்ற அந்த மர நிழல்களை மறக்க முடியாது. (கைதட்டல்) அப்படிப்பட்ட ஒரு மருத்துவப் பல்கலைக்கழத்தினுடைய அமைப்பு இதைத்தவிர வேறு எங்கும் இருக்க முடியாது என்றே நான் கருதுகின்றேன். (கைதட்டல்) அமைப்பு என்பது கட்டிடங்களால் மாத்திரம் உருவாவதல்ல; அமைப்பு என்பது அங்கு இருக்கின்ற மர நிழல்களால் மாத்திரம் ஏற்படுவதல்ல; அமைப்பு என்பது அங்கு இருக்கின்ற உயர்தர சிகிச்சைக்குரிய உபகரணங்களால் மாத்திரம் ஏற்படுவதல்ல; அந்த அமைப்பு என்பது அங்கே மருத்துவர்களாக இருக்கின்றவர்கள் மனிதர்களாக இருக்கிறார்களா என்பதைத்தான் மிக முக்கியமாகப் பார்க்க வேண்டும். இந்தப் பல்கலைக்கழகத்திலே டாக்டர்களாக இருப்பவர்கள் மனிதர்களாக இருக்கிறார்கள். அந்த மனிதர்கள்தான் இங்கே பல மனிதர்களுக்கு சிகிச்சை அளித்து டாக்டர்களாக உலவுகின்றார்கள்.

நான் இந்த மருத்துவமனையிலே சிகிச்சை பெற்ற போது பழகிய, அதற்குப் பிறகு பழகுவதற்கான வாய்ப்பைப் பெற்ற மருத்துவ நிபுணர்களெல்லாம் இந்த மேடையிலே இருக்கின்றார்கள். அதிலே குறிப்பாக நம்முடைய பேராசிரியர் மார்த்தாண்டம் அவர்களைச் சொல்ல வேண்டும். அவர்தான் அந்த அறுவை சிசிக்சை நடைபெற்ற போது, டெல்லியிலே இருந்து ஒரு மருத்துவர் வந்திருந்தாலும்கூட, அவருடைய துணையோடு எனக்கு அந்த அறுவை சிசிச்சையைச் செய்தார். தைரியமூட்டக்கூடிய அளவிற்கு எப்போதும் எனக்கு உற்ற நண்பரைப் போல, சகோதரரைப் போல விளங்குகின்ற தணிகாசலம் அவர்கள் இங்கே அன்றைக்கு இருந்தார்; இன்றைக்கும் இருக்கின்றார்.

அப்படிப் பல மருத்துவர்கள் இந்த வளாகத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் இங்கே குறிப்பிட்டார்களே நம்முடைய மார்த்தாண்டம் அவர்கள், அவர்களைப் போல உணர்வோடு – நோயாளிகள் என்றால் அவர் தனி என்று கருதாமல் அவர்களும் நம்மவர்கள்தான், அவர்களுக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வோடு அவர்களை அணுகி, மருந்தளித்து, நல் உரையின் மூலமாக அவர்களுடைய நோயைத் தீர்த்து வைக்கிறார்கள் என்றால் அப்படிப்பட்ட டாக்டர்கள் இங்கே இருக்கின்றீர்கள். உங்களையெல்லாம் நான் நோயுற்றிருந்து, குணமடைந்து, மகிழ்ச்சியோடு வீடு திரும்பியவர்கள் சார்பாகவும், ஏன் என் சார்பாகவும்கூட – நானும் அவர்களிலே ஒருவன்தான் – என் சார்பாகவும் வாழ்த்த, பாராட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த வளாகத்திற்குள்ளே நோயாளியாக – அறுவை சிகிச்சை நோயாளியாக நான் அனுமதிக்கப்பட்டபோது, எத்தகைய நினைவுகள், எத்தகைய பயங்கரமான எண்ணங்கள், எதிர்காலத்தைப் பற்றிய எத்தனை நினைவலைகள் – இவைகள் எல்லாம் எனக்கு ஏற்படாமலில்லை. வந்தவுடனே ''ஸ்கேன்'' எடுக்கிறோம் என்று சொல்லி, நம்முடைய தணிகாசலம் அவர்களும், நம்முடைய மார்த்தாண்டம் அவர்களும் என்னை இரவு 2 மணிக்கு அழைத்துச் சென்று ''ஸ்கேன்'' எடுத்தபோது, நான் பட்டபாடு, எனக்கு ஏற்பட்ட வலி, அந்த வலியினுடைய எதிரொலி இன்னமும் இந்த மருத்துவமனையிலே இருக்கக்கூடும். ஏனென்றால் அந்த அளவுக்கு உரக்கக் கத்தி நான் இங்கே சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டேன். என்ன ஆகுமோ என்று என்னுடைய இயக்கத்தினரும், என்னுடைய சக நண்பர்களும், என்னுடைய கட்சியினுடைய தூண்களாக இருப்பவர்களும் கலங்கியிருந்த போது, அவர்களுடைய கலக்கத்தை, குடும்பத்தாருடைய கலக்கத்தை, அத்தனை பேருடைய கலக்கத்தையும் போக்கிய ஒரு இடமாக நம்முடைய இராமச்சந்திரா பல்கலைக்கழகம் அன்றைக்கு இருந்தது (கைதட்டல்). அதனுடைய வெள்ளி விழாதான் இன்றைக்கு நடைபெறுகிறது என்பதைக் காணும்போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டதைப் போல, கலைஞர் காப்பீட்டுத் திட்டம் மூலமாக பெரிய நோய்கள் எல்லாம் தீர்க்கப்பட்டு, சிறு குழந்தைகள் கூட புற்றுநோய்க்கு ஆளாகியிருப்பவர்கள் – விளையாடக்கூடிய வயதில் விளையாட முடியாமல் அவர்களுடைய குடும்பத்தார் வேதனையோடு அள்ளி அணைத்துக்கொண்ட அந்தப் பிள்ளைகள் எல்லாம் இன்றைக்கு அந்த நோயிலிருந்து விடுபட்டு, இந்த மேடையிலே வந்து என்னோடு கைகுலுக்கி, எனக்கு வாழ்த்துச் சொல்லி, ஓரிரு குழந்தைகள் அவர்கள் நேற்று முன்தினம் வரைந்த சித்திரத்தையும், எனக்காக எழுதிய வாழ்த்துக்களையும் இங்கே அவர்கள் படித்துக் காட்டியபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இவ்வளவு பெரிய காரியத்தை நாம் செய்து ஒரு குழந்தையினுடைய உயிரைக் காப்பாற்றி அதைக் காணுகிறோம் என்பதைவிட; ஆயிரக்கணக்கான குழந்தைகளுடைய உயிரைக் காப்பாற்றுகின்ற ஒரு பெருமுயற்சியை எடுத்திருக்கிறோம் என்றால், என்னை நம்பி அல்ல, வேறு யாரையும் நம்பி அல்ல, இந்த இராமச்சந்திரா பல்கலைக்கழகத்திலே இருக்கின்றவர்களைப் போன்ற டாக்டர்களை நம்பித்தான் இந்தப் பணியைத் தொடங்கியிருக்கிறோம். அவர்கள் நம்மை ஏமாற்ற மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடுதான் அந்தக் குழந்தைகளானாலும், வயதானவர்களானாலும், நோய்க்கு ஆட்பட்டவர்களானாலும், நோயினால் தாக்கப்பட்டவர்களானாலும், அவர்கள் எல்லாம் நம்பிக்கையோடுதான் அவர்களுடைய கைகளிலே இந்த அரசு ஒப்படைக்கின்றது – ஒப்படைத்திருக்கின்றது – அவர்கள் எங்களின் நம்பிக்கைக்கு எந்தவிதமான ஊனமும் வராமல் அவர்களையெல்லாம் காப்பாற்றி வருகின்றார்கள். ஆகவே, அந்த டாக்டர்கள் அனைவருக்கும், அவர்களுடைய உதவியாளர்களுக்கும், அவர்களுக்கு உதவியாக இருக்கின்ற அன்புச் சகோதரிகளான செவிலியர்களுக்கும், செவிலியர்களாக இருப்பதிலே ஆண்களும் இருக்கிறார்களே அவர்களுக்கும் நான் அவர்களையெல்லாம் நோயாளியாக இருந்து கண்டவன்; அவர்களுடைய நேசத்தை, பாசத்தை உணர்ந்தவன்; என்னிடத்திலே அவர்கள் அனைவரும் காட்டிய அன்பை நினைத்து நினைத்து இன்றைக்கும் மகிழ்பவன். அப்படிப்பட்ட தோழர்கள் எல்லாம் இந்த வளாகத்திலே இருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் நான் வாழ்த்துகின்றேன். நன்றி கூறுகிறேன்.

இந்த அருமையான வளாகத்தை – நிறுவனத்தை உடையார் அவர்களுக்குப் பிறகு, அவருடைய அருமைச் செல்வன் வழிநடத்தி நம்மை எல்லாம் மகிழ்விக்கின்ற அளவுக்கு இவ்வளவு பெரிய விழாவை நடத்தியிருக்கின்றார். வெள்ளி விழா கண்ட இந்தப் பல்கலைக்கழகம் பொன்விழாவையும் காணவேண்டும் (கைதட்டல்). நூற்றாண்டு விழாவையும் காணவேண்டும். அப்படிப்பட்ட விழாக்களைக் காணும்போதெல்லாம் மக்கள் மகிழ்ச்சியடைவார்கள். இதை நிர்வகிக்கின்றவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். நாமும் மகிழ்ச்சியடைவோம் என்று கூறி உங்களுடைய மகிழ்ச்சியிலே நானும் பங்குபெறுகிறேன் என்று கூறி விடைபெறுகிறேன்.

* * *

வெளியீடு:–

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.